மக்களை மயக்கப் புதிய காங்கிரஸ் தந்திரம்

நாட்டியக் கோஷ்டிகளுக்கு ஏற்பாடு

................(0)................

காங்கிரஸ்காரர்களின் பரிதாப நிலை

————(:0:)———

பரதநாட்டியம்-கச்சேரிகள் முதலியவற்றிடம் சரணாகதி

............(x)............

தேர்தலில் வெற்றிபெற காங்கிரஸார் எந்த வேலையும் செய்யத் தயார்

சென்னை, ஏப். 26—

சென்னை மாகாணத்தில் காங்கிரஸ்காரர்கள் ஊழல்களிலும், கள்ளச்சந்தையை அடக்க முடியாமல் வளர்ப்பதிலும் மக்கள் வாழ்வு உயர முடியாதபடிக்கு வேலைகளைச் செய்வதிலும் ஈடுபட்டு, இந்த நான்காண்டுகால ஆட்சியையும் மக்களுக்குப் பாதகமான முறையில் நடத்திவந்துள்ளபடியால், பொதுமக்கள் காங்கிரசிடத்தில் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

காங்கிரஸ் மந்திரிகளுக்கோ, காங்கிரஸ்காரர்களுக்கோ மக்கள் ஆதரவு காட்டுவதில்லை காங்கிரஸ்காரர்கள் கூட்டம் போட்டால் கள்ளச்சந்தையினர் தவிர மற்றெவரும் போவதில்லை

எனவே, தேர்தல் காலத்தில் மக்களை மயக்க காங்கிரஸ்காரர்கள் புதிய திட்டங்களை வகுக்க முன்வந்துள்ளனர். நாட்டியக் கச்சேரிகள், சங்கீதக் கச்சேரிகள் முதலியன நடத்தி, அவற்றின் மூலம் மக்களைத் திரட்டித்தங்கள் பொய்மூட்டைகளை அவிழ்த்து விடுவதென்று முடிவு செய்திருக்கின்றனர்.

தேர்தல் காலத்தில் காங்கிரஸ்காரர்கள் தேர்தல் கூட்டங்கள் நடத்தினால் பொதுமக்கள் எவரும் அக்கூட்டங்களுக்கு வரமாட்டார்கள் எனத் தெரிவதால், சென்னை மாகாணக் காங்கிரஸ்காரர்கள் ஒரு புதிய தந்திரத்தைக் கையாள முன்வந்திருக்கின்றனர்.

இந்தப் புதிய தந்திரத்திற்குப் பெயர் "அரசியல் நாட்டியம்" இந்தப் புதிய தந்திரத்தை அ இ கா. க. ஏற்றுக்கொண்டவுடன் இம்முறை சென்னை மாகாணமெங்கும் அனுசரிக்கப்படும் என்று தெரிகிறது.

காங்கிரஸ்காரர்கள் மக்களிடம் செல்வாக்கிழந்துவிட்டதால் ஏதாவது ஒரு புதிய திட்டத்தை, மக்களை மயக்கி வசப்படுத்தக்கூடியவாறு வகுத்தேயாகவேண்டுமென்ற காங்கிரஸ் தலைவரிடம், தென்னிந்தியக் காங்கிரஸ்காரர்கள் சிறுதநாட்களுக்கு முன்னரே அறிவித்திருக்கின்றனர் இங்ஙனம் புதிய திட்டம் வகுத்தாலன்றித் தேர்தலில் வெற்றி பெறுவது கடினம் என்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

நாட்டியக் கோஷ்டிகளை ஏற்பாடு செய்தும் பிறகண்காட்சிகளை ஏற்பாடு செய்தும் மக்களைப் பெருவாரியாகக் கூட்டுவதற்கு ஏறபாடு செய்து விட்டால பிறகு, மக்களிடம் முன்னதாகவே ஒழுங்காகத் திட்டமிட்டு வைத்துள்ள பொய்ப்பிரசாரங்களைச் செய்வதன்மூலம் மக்களை ஏமாற்றி ஓட்வாங்கிவிடலாம் என்று காங்கிரஸ்காரர்கள் கருதுகின்றனர். இவ்வாறு நாட்டியம், பாட்டுக்கச்சேரி பிற கண்காட்சிகள் முதலியவற்றைப் பார்க்க, காங்கிரஸிடம் வெறுப்புக்கொண்டவர்களும் வருவார்களாதலின் அவர்களையெல்லாம் தங்கள் வாய்ப்பிரசாரத்தின் மூலம் சரிப்படுத்திவிடலாம் என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்கின்றனர்.

எனவே, இந்த எண்ணம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களிடையே வலுப்பெற்று எல்லா வகையான நாட்டியக்காரர்களையும் பாடகர்களையும் காங்கிரஸ் சார்பில் நாட்டியமாடவும் பாட்டுப்பாடவும் இப்போது முதலே ஏற்பாடு செய்வதில், முக்கியமான காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். காங்கிரஸ் தலைவர்களிடையே இந்த நாட்டியப்பித்து இப்போது தலைக்கேறியிருக்கிறது.

இந்தத் திட்டங்கள் சென்னை மந்திரிசபையினராலும் ஆதரிக்கப்பட்டிருக்கிறது என்று கருதப்படுவதற்கேற்ப தேர்தல் மந்திரி கோபாலரெட்டி சிறிது நாட்களாக நாட்டியப் பள்ளிக்கூடங்களிலும் நாட்டியக் கோஷ்டிகளிலும் அதிகமாகப் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்.

அண்மையில் ஒரு கிராமத்தில் கோபால் ரெட்டி பேசியபோதுகூட பாத நாட்டியத்தின் அவசியத்தை

(3 ம் பக்கம் பார்க்க)

Phone: No. 4502 Regd; No. M. 5458

விலை முக்காலணா இலங்கை 8 தம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்தேழு)

மாலை 2 | சென்னை 27—4—51 | மணி 142

சூலூர்ப் பிர்க்கா மக்கள் திண்டாட்டம்

...............(0)...............

உணவுக்கடை எடுபட்டதால் அல்லலதிகரிக்கிறது

————(0:)————

காங்கிரஸ் ஆட்சியின் அலங்கோலம்

கோவை, ஏப். 26—

பட்டினிச்சாவும், வேலையில்லாக் கொடுமையும் நாடெங்கும் பரவி வருகிறது. விளைச்சல் இல்லை என்ற ஓலமும் வேலையில்லை என்ற கூக்குரலும் விண்ணதிர வீறிட்டலறும் ஒலி இன்று ஆளும் வர்க்கத்தார் காதுகளிலும் கண்களிலும் படவில்லைபோலும். பதுக்கலும் கள்ள மார்க்கட்டும் ஏழையை அரிக்கப் படைஎடுத்துவிட்டன. இதுதான் இன்றைக் குடியாட்சியின் காட்சி.

கோவை மாவட்டக் கிராமங்களிலெல்லாம் ரேஷன் எடுபட்டுவிட்டது. ரேஷன் ஒழிந்தால் சோற்றுக்குச் சோர்வில்லையென கோவை மாவட்ட விவசாய சங்கம் முழங்கிற்று. ரேஷன் ஒழித்த பின்னர் சர்க்கார் பஞ்ச நிவாரணக் கடைகளைத் திறந்தனர். பல்லடம் தாலுக்காவில் சூலூர் பிர்க்காவில் மட்டும் ரேஷனை ஒழித்து நியாய விலைக் கடையையோ பஞ்ச நிவாரணக் கடையையோ சர்க்கார் திறக்கவில்லை. சூலூர் கிராமம் சுமார் 8500 மக்களைக்கொண்டது. 8500 மக்களில் 500 பேர் விவசாயிகளாவார்கள். மீதமுள்ள 8000 பேரும் உணவு கிடைக்காமல் இன்று அவதிப்படுகின்றனர். அப்படிமீறி உணவுப்பொருள் கிடைப்பதென்றால் ஒன்றுக்கு இரண்டாக விலை கொடுத்து வாங்கும்படியான நிலையிருக்கிறது. ஏழைகள் இதை எப்படி சமாளிப்பதென்பதை அறிய முடியாதபடி கலங்குகின்றனர்.

சூலூர் பிர்க்கா முழுதிலுள்ள மக்கள 30,000-க்கு மேற்பட்டவர்களாவார்கள். இதில் 25,000-க்கு மேற்பட்டவர்கள நிலமற்றவர்கள், ஏழைகள்; இந்த ஏழை மக்கள் உணவிற்காக பஞ்சாய்ப் பறக்கின்றனர். எந்த விவசாயிகள் ரேஷன் ஒழிந்தால் அகவிலை குறையுமென்றார்களோ அதே விவசாயிகள் சுயநலப்பற்றும் மனிதத் தன்மையில்லாமலும் அதிகப்படியான விலைக்கு உணவுப் பொருள்களை சந்தையில் விற்கின்றனர். சர்க்காராவது சூலூர் பிர்க்காவில் பஞ்ச நிவாரணக் கடையை தோற்றுவித்திருந்தால் இந்தநிலை நீடித்திருக்காது கள்ள மார்க்கெட் உற்பத்திக்குத்தான் விவசாயிகள் ஓலமிட்டார்களோ! எனஇதுபோது நாம் சந்தேகிக்கிறோம். பல்லடம் தாலுக்கா சூலூர் பிர்க்காவிலே பஞ்ச. நிவாரணக் கடையை எடுத்தால் என்ன நேர்கிறதென்பதைப் பரிசீலனை செய்வதற்காகத்தான அரசாங்கம் பஞ்ச நிவாரணக் கடையைத் திறக்கவில்லையாம்! பட்டினியால் மக்கள் சாவதைக் காண்பதற்காகச் சூலூர்ப் பிர்க்காவைப் பரிசீலனைக் கூடமாக அமைப்பதில் அரசாங்கத்துக்கு அவ்வளவு ஆனந்தம்போலும் அவுன்ஸ் கணக்கிட்டு அரிசி வழங்கி அரை உயிரை வைத்திருக்கும மக்களிடத்தில் இந்த விஷப் பரீக்ஷையை நடத்திப்பார்க்க இது தான் வேளையா? பட்டினிபோட்டு அவதிப்படவைப்பது அறிவுள்ள சர்க்காருக்கு அழகா? உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும்போது உல்லாசமாகச் சோதனை வட்டாரம் என சால்ஜாப்பு மொழிவது சரியா? மழையில்லை; விளைச்சலில்லை எனவே உணவில்லை என்று ஆர்மாதிக்கும் முறையிலே பேசி அதிகாரிகள் கண்துடைப்பது கண்ணாமூச்சிக் கோலமாகும். சூலூர்ப் பிர்க்காவைச் சோதனை வட்டாரமாகப் பரிசீலனை செய்தது போதும்! செத்துவிடப் போகிறார்கள் ஏழைகள் என்பதை அறிந்ததிலிருந்து உடனடியாக பஞ்ச நிவாரணக் கடையை திறந்து ஏழை மககளுக்கு ரேஷன் வழங்க வேண்டுகிறோம். ஜில்லா கலெக்டர் அவர்கள் உடனடியாக இதில் கவ

4-ம் பக்கம் பார்க்க

மாலைமணி

னை 27—4—51 வெள்ளிக்கிழமை

விலைகள் உயரும் மர்மம்

"கண்ட்ரோல்கள் இல்லாவிடின் தேசத்தில் குழப்பம பெருகி விட்டிருக்கும், மக்கள் வர்த்தகர்கள் மீது ஆத்திரம் கொண்டு வாதத்க் சமூகம பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும."

என்று மத்திய அரசாங்க அமைச்சர் ஹரிகிருஷ்ணமஹ்தாப் இந்தியா சட்டசபையில் ஒரு விவாதத்திற்குப் பதிலளிக்கையில் கூறினர்.

உண்மைதான் கண்ட்ரோல்கள் ஓரளவு மக்களுக்கு நன்மை செய்யக்கூடியவைதான். ஆனல் கண்ட்ரோல்களை ஒழுங்கான முறையில் இந்த அரசாங்கம் அனுசரித்திருக்குமாயின் அதனல் மக்களுக்கு முழு நன்மை விளைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை அரசாங்கமோ அவ்வாறு செய்யவில்லை. கண்ட்ரோல்களின் பெயரால் நாட்டில் பதுக்கல், கள்ளச்சந்தை முதலியவை பெருகுவதற்கே இடந்தரப்பட்டன.

இதன் பயனுக, கண்ட்ரோல் உத்தரவு தாளில் இருக்கும்; அரசாங்கம் அவ்வுத்தரவை வெளியிட்டிருக்கும். கடைத்தெருவில் கண்ட்ரோல் சாமான்கள் ஒன்று கூட இராது. ஆனல் அதே கண்ட்ரோல சாமான் கள்ளச்சந்தையில் ஒன்றுக்கு மூன்ருக விற்பனை செய்யப்படும். இவ்வாறே கண்ட்ரோலுக்குள்ளான சாமான்கள் மக்களுக்குச் சாதாரணமாகக் கிடைக்க வழியில்லாமலே போய்விட்டதைப் பொதுமக்கள் அனைவரும் அறிவர்.

ஏன் இவ்வாறு கண்ட்ரோல் சாமான்கள் மறைந்து கள்ளச் சந்தையில் மட்டும விற்பனைக்குத் கிடைத்தன என்பது பற்றி அரசாங்கம கவலைப்படவுமில்லை, அதனைத் தடுக்க வேலை செய்யவுமில்லை.

இதற்குக் காரணம் என்ன? கண்ட்ரோல் செய்வதாக அரசாங்கம் உத்தரவு வெளியிடுவது பொதுமக்கள் மனத்தை மயக்க. உடனே சாமான்களைப் பதுக்குவதும், கள்ளமார்க்கட்டில் விற்பதும் காங்கிரஸ் தலைவர்களும், வடநாட்டு மார்வாரிகளும்.

இப்படிப்பட்டவர்களை அரசாங்கம் எப்படி அடக்குவது? யாரை யார் அடக்குவது? செல்வாக்கு மிகுந்த காங்கிரஸ்காரர்களே கள்ளச்சந்தையினராக இருக்கும்போது அவர்களைக் கைது செய்வது எப்படி? எனவே, கண்டரோல் என்பது வெறும் கேலிக்கூத்தாகவும் போலி நாடகமாகவும் ஆயிற்றே ஒழிய உண்மையில் அதனல் மக்களுக்கு யாதொரு நன்மையும் விளையவில்லை. இதற்குப் பதிலாகக் கண்ட்ரோல் எனும் பெயரால் காங்கிரஸ்காரர்கள் பலரும், வடநாட்டுப் பனியாக்களும் மக்களுக்கு இன்றியமையாத் தேவைப் பொருள்களை நல்ல முறையில் பதுக்கிவைத்துக் கள்ளசசந்தையில் விற்றுப் பெரும் பணக்காரர்களாக வழி பிறந்தது என்றே கூற வேண்டும்.

நிலக்கடலை என்ருல், அதை ஒரே பேர்வழி எல்லாவற்றையும் விலை கொடுத்து வாங்கிவிடுவார். பயிராகும் நிலக்கடலையனைத்தையும் ஒரே பேர்வழி விலை கொடுத்து வாங்கிப் பதுக்கிவிட்டால், கடைத்தெருவில் நிலக்கடலை யில்லாமற்போய், அதனல் நிலக்கடலை எண்ணெயும், அது சம்பந்தமான பிற பொருள்களும் விலை ஏறிவிடுகின்றன. அதன் பிறகு, மும்மடங்கு அதிக விலையில், நிலக்கடலை கடைத்தெருவுக்கு வருவதும், அதன் விலை உயர்ந்து மக்கள் வாங்க முடியாமல் திண்டாடுவதுமாக ஆகிவிடுகிறது.

இதேபோன்று ஒவ்வொரு பொருளையும் பணம் படைத்த வடநாட்டுப் பனியாக்களும் சில தென்னுட்டுக் காங்கிரஸ்காரர்களும் சேர்ந்து, உற்பத்திக் காலங்களில் அவற்றை ஒன்றுவிடாமல் வாங்கிப் பதுக்கிவைத்து, அப்பொருளுக்கு மார்க்கெட்டில் பெரும் பஞ்சம் தோன்றும் வரையில், அப்பொருளுக்கு இன்றியமையாத் தேவை ஏற்பட்டு எவ்வளவு விலையாலுைம் கொடுத்து வாங்க வேண்டும என்ற நிலை மக்களிடை ஏற்பட்ட பிறகு, அவற்றைச் சிறிதாகக் கள்ளச்சந்தையில் உயர்ந்த விலையில்விற்பதற்கு அனுப்பி வைக்கும் நிலையில்தான் வியாபாரம் நடத்தியிருக்கின்றனர்.

எனவே, அரசாங்கம் கண்ட்ரோலைக் காட்டிக் கள்ளமார்க்கெட்டை வளர்த்து வந்ததேயொழிய மக்களுக்கு இதனல் நன்மை விளைந்துவிட்டதென்று கூறுவது முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கப் பாக்கும் சூழ்ச்சியேயாகும் என்பதில் தவறில்லை.

கதர்க்குல்லாயாட்சி

(தூண் கோல்)

நண்பர் ஒருவர் புதுமைக்கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளார் அது நமக்குப் பழமைதான். அதாவது, மார்ச்சு மாதம் 13-ம் தேதி செவ்வாய்க்கிழமை இரவு 11 மணிக்கு எழும்பூர் 'பிரந்தாவன்" என்ற ஹோட்டலைச் சோதனை செய்து, 2-ம் எண் அறையிலிருந்து சுமார் 4 பேல்கள் துணி கண்டுபிடிக்கப்பட்டு போலீஸ் லாரி (எண் 8004)ல் ஏற்றிச் செல்லப்பட்டது.

இது நடந்து ஒரு மாதத்துக்கு மேலாகியும் செய்தி வெளிவராத காரணமென்ன? என்று நண்பர் கேட்டுள்ளார். நண்பர் 1942-க்கு முன் இருந்த ஆட்சி என்று நினைத்துக்கொண்டுள்ளார் போலும்.

இப்பொழுது நடப்பது நம் ஆட்சி-நம் ஆட்சி என்ருல், இந்தியர் சுதந்திர ஆட்சிங்காணும். இன்னும் சொன்னல் மக்களாட்சி-காந்திய ஆட்சி-குடியாசு ஆட்சி-அதற்குமேல் இராமராஜ்ய ஆட்சி என்று திட்டவட்டமாச் சொல்லலாம்.

இராம இராஜ்ய ஆட்சியில் இனப்பாகுபாடு உண்டு இனத்துக்கொரு நீதி வழங்கப்படும்.

ஆனல் காங்கிரசார் இராமராஜ்ய ஆட்சியில், கள்ளச் சந்தை வாணிகத்துக்குத் தாராள அனுமதி-கதர் அணிந்துகொண்டு காலித்தனம் செய்யலாம் - பணக்காரர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் ஏகபோக உரிமை-கதரணிந்துகொண்டு குடிக்கலாம்-தெரிந்ததோ! இப்படிப்பட்ட கதர்க்குல்லாய்களாட்சியில் அவர்கள் செய்தி எப்படி வெளிவரும். பெரிய செய்தித்தாள்களெல்லாம் அவர்களுடையது. ஆனல் நாமோ மானமின்றி, அச்செய்தித்தாள்களை வாங்குகிறோம். எத்தனையோமுறை எழுதி மேடைகளில் எடுத்து விளக்கியும் இன்னும் நமக்கு உணர்ச்சி வந்ததாகத் தெரியவில்லை.

கூட்டம் என்ருல் ஆயிரக்கணக்கில் கூடி கைதட்டிச் செல்வதற்குப் பின்வாங்குவதில்லை. செய்கையில்...?

இப்படிப்பட்டசெய்திகள் வெளிவரவேண்டுமானல் செய்தித்தாள் எரிக்கும் நாள என்று ஒருநாளை ஏற்படுத்திக்கொண்டு அன்று அண்டப்புளுகு தேசியத தாள்களைக் குவித்துக்கொளுத்துங்கள்.

இப்படியெல்லாம் செய்யமாட்டீர்கள். இப்படிச் செய்தால் நீங்கள் வீரத் திராவிடர்களாகிவிட மாட்டீர்களா?

கள்ளமார்க்கட்டுக்கு ஜே!

காலிகளுக்கு ஜே!

....

செயற்கை மழை-புதுமுறை

லண்டன், ஏப். 26—

செயற்கை மழை பெய்விக்க ஒரு புதுமுறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஹைட்ரொஜன் அடங்கிய பலூன்கள் மூலம் ஸில்வா அயோடைட் கலந்து வெடிமருந்து பேகங்களிடையே சென்று வெடிப்பதற்கான வழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இராமநாதபுர மாவட்ட தி. மு. க. முதல்மாநாட்டுச் செயற்குழுகூட்டம்

சிவகங்கை, ஏப். 26—

இராமநாதபுர மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதலாவது மாநாட்டின் வரவேற்புக் குழுக் கூட்டம மேற்படி குழுத்தலைவர் தோழர் கே. இராசசேகரன் அவர்கள் தலைமையில் 21-4-51 சனிக்கிழமை காலை 11 மணிக்கு சிவகங்கையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இராமநாதபுர மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதலாவது மாநாடு சம்பந்தமான வரவு செலவு கணக்குகள் பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்த வரவு செலவு கணக்கை, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளருக்கும், மாவட்டச் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கும்படி வரவேற்புக்குழுத் தலைவருக்கு இக்குழு அனுமதி யளிக்கிறது.

இராமநாதபுரம் மாவட்ட திராவிட முன்னேற்றக்கழக முதல் மாநாட்டு வரவு செலவு கணக்கு

வரவு

டிக்கெட்	ரூ 8329	0	0
நன்கொடை	1879	0	0
வரவேற்புக்கட்டணம்	145	0	0
ஸ்டால்	161	0	0
எக்ச்சேஞ்சு மூலம்	26	0	0
சாப்பாடு டிக்கட்	173	2	0
மீதச்சாமான்விற்றது	150	0	0
சங்குநாதம் ஆபீஸ்	203	0	0
வரவேற்புக்குழுத்தலைவர்	147	0	0
பொருளாளர்	63	0	0
மொத்தம்	11276	2	0

செலவு.

மாநாட்டுப் பந்தல், சாபபாட்டுப்பந்தல், மேடை	1296	15	3
சாப்பாட்டுச் செலவு	3406	14	6
விளம்பரம், தபால், தந்தி மணியார்டர்	1047	11	0
மின்சாரம், ஒலிபெருக்கி	443	12	6
நாடகம், இசை	1513	0	0
போக்குவரத்து (பேச்சாளர்கள், தலைவருட்பட)	1523	6	6
இதர செலவுகள்	367	13	9
நிலுவை டிக்கட்டுகள்	1442	0	0
துணைச்செயலாளர் வசம் இருப்பு	234	8	6
மொத்தம் ரூ.	11276	2	0

பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

இராம. சுப்பையா
வரவேற்புக்குழுச் செயலாளர்
கே. இராசசேகரன்
வரவேற்புக்குழுத் தலைவர்

பொது அறிவுப் போட்டி

தற்சமபம் உலகில் முக்கியமாக நடைபெறும் விஷயங்களைப்பற்றி மாணவர்கள் எவ்வளவு தூரம் அறிந்திருக்கிருர்கள் என்பதை அறிவதற்கு அமெரிக்காவிலுள்ள உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் ரேடியோப் போட்டிகள் நடக்கின்றன.